[2011 ஆகஸ்ட் 17

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ நாளை (18-8-2011) வியாழக்கிழமை அன்று தளர்த்தி, அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்"

என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

நாளை (18-8-2011) வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (18-8-2011) வியாழக்கிழமை காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-47 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

20. தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால், தமிழ்நாடு மின் வழங்கல் விதித் தொகுப்பில் திருத்தங்கள் செய்தது குறித்து 24-11-2010 ஆம் நாளிட்ட எண் த.மி.ஒ.ஆ./SC/7-21-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 182 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

21. தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய (மின் கட்டண வீதத்தினை நிர்ணயம் செய்வதற்கான விதிமுறைகள் மற்றும் வரையறைகள்)

ஒழுங்குமுறை விதிகளில் திருத்தம் செய்தது குறித்து 31-5-2010 ஆம் நாளிட்ட எண் த.மி.ஒ.ஆ./TR/5/2-8-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 182 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

22. தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால், (i) தமிழ்நாடு மின் வழங்கல் விதித் தொகுப்பில் திருத்தங்கள் செய்தது குறித்து 6-5-2010 ஆம் நாளிட்ட எண் த.மி.ஒ.ஆ./SC/7-19-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை; மற்றும் (ii) 22-7-2009 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்ட தமிழ்நாடு மின்சார வாரியத்தின் அறிவிக்கை எண் த.மி.ஒ.ஆ./SC/7-14, நாள் 29-6-2009-ல் பிழைத் திருத்தம் செய்தது குறித்து 3-5-2010 ஆம் நாளிட்ட எண் த.மி.ஒ.ஆ./SC/7-18-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 182 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

23. தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால், 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய (புதுப்பிக்கத்தக்க எரிசக்தி கொள்முதல் கடப்பாடு) ஒழுங்குமுறை விதிகளை இயற்றியது குறித்து 7-12-2010 ஆம் நாளிட்ட எண் த.மி.ஒ.ஆ./புகொக(RPO)/19/1-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 182 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

24. தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால், (i) 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையக் கட்டணங்கள் மற்றும் அபராதங்கள் ஒழுங்குமுறை விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து 11-5-2009 ஆம் நாளிட்ட எண் த.மி.ஒ.ஆ./ஒழுங்குமுறை விதிகள்/F&F/4/2-4-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை; (ii) 2004 ஆம் ஆண்டு மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்சாரக் குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளுக்குத் திருத்தம் செய்தது குறித்து 5-11-2009 ஆம் நாளிட்ட எண் த.மி.ஒ.ஆ./CGRF&EO/6-3-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை; (iii) 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் - மாநிலத்திற்குள் திறந்த நுழைவுரிமை ஒழுங்குமுறை விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து 9-2-2010 ஆம் நாளிட்ட எண் த.மி.ஒ.ஆ./ISOA/11/1-3-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை; மற்றும் (iv) தமிழ்நாடு மின் கட்டமைப்பு விதித் தொகுப்பினை குறித்துரைத்தது குறித்து 19-10-2005 ஆம் நாளிட்ட எண் TNERC/

[2011 ஆகஸ்ட் 17

GC/13/1-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 182 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

25. தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால், (i) தமிழ்நாடு மின் பகிர்மான விதித் தொகுப்பில் திருத்தங்கள் செய்தது குறித்து 29-6-2009 ஆம் நாளிட்ட எண் த.மி.ஒ.ஆ./மி.ப.வி./8-11-ல் மற்றும் (ii) 24-8-2009 ஆம் நாளிட்ட எண் த.மி.ஒ.ஆ/மி.ப.வி./8-12-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள்; (iii) தமிழ்நாடு மின் வழங்கல் விதித் தொகுப்பு, தமிழ்நாடு மின் பகிர்மான விதித் தொகுப்பு, 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின் பகிர்மானச் செயல்திறச் செந்தரங்களுக்கான ஒழுங்குமுறை விதிகள் ஆகியவற்றில் திருத்தங்கள் செய்தது குறித்து 3-12-2007 ஆம் நாளிட்ட எண் த.மி.ஒ.ஆ/SC/7-6-ல்; (iv) 3-12-2007-ஆம் நாளிட்ட த.மி.ஒ.ஆ./DC/8-7-ல்; மற்றும் (v) 3-12-2007-ஆம் நாளிட்ட த.மி.ஒ.ஆ./SPR/9/1-8-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள்; (vi) தமிழ்நாடு மின் பகிர்மான செயல்திறச் செந்தரங்களுக்கான ஒழுங்குமுறை விதிகளில், ஒழுங்குமுறை விதிகள் 21 மற்றும் 22 ஆகியவை நடைமுறைக்கு வரும் தேதியை குறித்துரைத்தது குறித்து 31-8-2005 ஆம் நாளிட்ட எண் த.மி.ஒ.ஆ./SPR/9/1-2-ல்; (vii) 31-5-2006 ஆம் நாளிட்ட எண் த.மி.ஒ.ஆ/SPR/9/1-3-ல்; (viii) 25-7-2006 ஆம் நாளிட்ட எண் த.மி.ஒ.ஆ/ SPR/ 9/1-4-ல்; (ix) 13-12-2006 ஆம் நாளிட்ட எண் த.மி.ஒ.ஆ./SPR/ 9/1-5-ல்; (x) 8-5-2007 ஆம் நாளிட்ட எண் த.மி.ஒ.ஆ./SPR/9/1-6-ல்; மற்றும் (xi) 9-7-2007 ஆம் நாளிட்ட எண் த.மி.ஒ.ஆ./SPR/9/1-7-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள்; (xii) 2008 ஆம் ஆண்டு புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களிலிருந்து கொள்முதல் செய்யப்படும் மின்திறன் ஒழுங்குமுறை விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து 24-12-2008 ஆம் நாளிட்ட எண் த.மி.ஒ.ஆ./ மரபுசாரா எரிசக்தி ஆதாரங்கள் ஒழுங்குமுறை விதி/16/3-ல்; (xiii) 27-4-2009 ஆம் நாளிட்ட எண் த.மி.ஒ.ஆ./மரபுசாரா எரிசக்தி ஆதாரங்கள் ஒழுங்குமுறை விதி/16/4-ல்; (xiv) 8-6-2009 ஆம் நாளிட்ட த.மி.ஒ.ஆ./மரபுசாரா எரிசக்தி ஆதாரங்கள் ஒழுங்குமுறை விதி/16/5-ல்; மற்றும் (xv) 14-12-2009 ஆம் நாளிட்ட த.மி.ஒ.ஆ./ மரபுசாரா எரிசக்தி ஆதாரங்கள் ஒழுங்குமுறை விதி/16/6-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள்; மற்றும் (xvi) 2009 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய (பல்லாண்டுக்கான மின் கட்டண வீதத் திட்டத்தின்படி மாநிலத்திற்குள் மின் செலுத்துதல்/மின் பகிர்மானத்திற்கான மின் கட்டண வீதத்தை

2011 ஆகஸ்ட் 17]

நிர்ணயிப்பதற்கான விதிமுறைகள் மற்றும் வரையறைகள்) ஒழுங்குமுறை விதிகள் இயற்றியது குறித்து 11-2-2009 ஆம் நாளிட்ட எண் த.மி.ஒ.ஆ/ப.ஆ.மி.க./18/1-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 182 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

26. 2009-2010 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆண்டறிக்கை மற்றும் ஆண்டுக் கணக்கு அறிக்கையுடன் தணிக்கை அறிக்கை. [2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 105 ஆம் பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

19. 2009-2010 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையின் ஆண்டறிக்கை. (தமிழ், ஆங்கிலம்)

20. மானியக் கோரிக்கை எண் 14-எரிசக்தித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2011-2012. (தமிழ், ஆங்கிலம்)

21. மானியக் கோரிக்கை எண் 44-குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2011-2012. (தமிழ், ஆங்கிலம்)

22. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை பற்றிய செயலாக்கத் திட்டம், 2011-2012. (தமிழ், ஆங்கிலம்)

23. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை பற்றிய "மக்கள் சாசனம்" 2011-2012. (தமிழ், ஆங்கிலம்)

24. மானியக் கோரிக்கை எண் 27-தொழில் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2011-2012. (தமிழ், ஆங்கிலம்)

25. தொழில் துறை பற்றிய செயல்பாட்டு ஆய்வுரை, 2010-2011. (தமிழ், ஆங்கிலம்)

26. தொழில் துறை பற்றிய செயலாக்கத் திட்டம், 2011-2012. (தமிழ், ஆங்கிலம்)

27. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல். (இரண்டாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை)